

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தன்று பிறந்த நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மற்றும் ராசிபுரம் அரசு மருத்துவமனையில் பிறந்த 17 குழந்தைகளுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தங்கமோதிரம் அணிவித்தார். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன், மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் பரணி, மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயர் செ.பூபதி, ராணா ஆனந்த், சிவக்குமார், என்.ஆர்.சங்கர், ஒன்றிய செயலாளர்கள் வி.கே.பழனிவேல், பெ.நவலடி, எம்.பி கௌதம், ஆர்.எம்.துரைசாமி, ஆர்.ஜெயப்பிரகாஷ், பாலசுப்ரமணியம், கே.பி. ஜெகநாதன், ஆர்.எம்.துரைசாமி மற்றும் கட்சி நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### காரைக்குடி – திருப்பத்தூர் சாலை, கும்மங்குடி கிராமத்தில்

# அரசுப் பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்து - 11 பேர் பலி!

## உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிவாரண உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, டிச.2-**

**சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், காரைக்குடி - திருப்பத்தூர் சாலை, கும்மங்குடி கிராமத்தில் அரசுப் பேருந்துகள் நேருக்குநேர் மோதிக்கொண்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக முதல்வர் அவர்களின் அறிக்கை வருமாறு :-

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், காரைக்குடி - திருப்பத்தூர் சாலை, கும்மங்குடி கிராமத்தில் அன்று 30.11.2025 பிற்பகல் அறந்தாங்கியிலிருந்து திண்டுக்கல் நோக்கிச் சென்ற அரசுப் பேருந்தும், திருப்பூரிலிருந்து காரைக்குடி நோக்கிச் சென்றுகொண்டிருந்த அரசுப் பேருந்தும் எதிர்பாராதவிதமாக நேரு க்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில், பேருந்துகளில் பயணம் செய்த ஒன்பது பெண்கள், இரண்டு ஆண்கள் என மொத்தம் பதினொரு நபர்கள் உயிரிழந்தனர், மேலும், 54 நபர்கள் காயம் அடைந்துள்ளனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு கடும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந் தேன்.

இவ்விபத்தில், காயமடைந்தவர்களுக்குத் தீவிர சிகிச்சை அளிப்பதற்காக அருகிலுள்ள அரசு மருத்துவமனைகளிலிருந்து திருப்பத்தூர், காரைக்குடி அரசு மருத்துவமனை மற்றும் சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அரசு மருத்துவர்கள் கூடுதலாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மேலும், தீவிர சிகிச்சை வழங்கப்பட வேண்டியவர்கள் மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்கள் அனைவருக்கும் சிறப்பு சிகிச்சை வழங்கிட அறிவுறுத்தியுள்ளேன்.

மேலும் மாவட்ட ஆட்சியரையும் மாவட்டப் பொறுப்பு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பனையும் தொடர்புகொண்டு, சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உரிய உயர்தர சிகிச்சை கிடைப்பதை உறுதிசெய்திடுமாறு அறிவுறுத்தியுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலி ருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




தருமபுரி புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பத்திரிக்கையாளர்களின் கோரிக்கையை ஏற்று ஒதுக்கப்பட்டுள்ள தனி பிரஸ் ரூமினை மாவட்ட ஆட்சியர் சதீஸ் மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் திமுக கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி ஆகியோர் திறந்து வைத்தனர். நிகழ்வில் நகர் மன்ற தலைவர் லட்சுமி மாது, நகர செயலாளர்கள் நாட்டான்.மாது, எம்.பி.கௌதம், ஒன்றிய செயலாளர்கள் பச்சியப்பன், காவேரி, சண்முகம், பத்திரிகையாளர்கள் முரசொலிமணி, வேணு, சுரேஷ், ஸ்ரீனிவாசன், புகழேந்தி, சரவணன், வெற்றிவேல் ராமதாஸ், ஐ.டி.விங் உதயசூரியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### கரூர் அருகே நெரூரில் கதண்டு வண்டு கடித்து

# தொழிலாளர்கள் மருத்துவமனையில் சிகிச்சை!

## வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. நேரில் நலம் விசாரிப்பு!

கரூர், டிச.2.

கரூர் அருகே நெரூரில் கதண்டு வண்டு கடித்து அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

கரூர் மாவட்டம் மண்மங்கலம் வட்டம் நெரூர் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், தொழிலாளர்கள் 100 நாள் வேலை திட்டத்தின் மூலமாக பாசன வாய்க்காலில் கவரு அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அருகே இருந்த மரத்தில் கூடு கட்டி இருந்த கதண்டு வண்டுகள் கூட்டம் கூட்டமாக பறந்து வந்து வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்களை கடித்தது.

இதில் 100 நாள் வேலை திட்ட தொழிலாளர்கள், வாய்க்காலில் குளித்துக் கொண்டிருந்தவர் என நான்கு பேர் காயமடைந்து கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். இது குறித்த தகவலறிந்து சிகிச்சை பெற்று வருபவர்களை கரூர் மாவட்ட தி.மு.க. செயலாளரும், கரூர் சட்டமன்ற உறுப்பினருமான வி. செந்தில்பாலாஜி நேரில் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறி, உடல் நலன் குறித்து கேட்டறிந்தார்.

கரூர் மாநகராட்சி துணை மேயர் தாரணி சரவணன், மண்டல குழு தலைவர்கள் எஸ்பி. கனகராஜ், ஆர்.எஸ்.ராஜா, வெங்கமேடு சக்திவேல், ஒன்றிய கழகச் செயலாளர்கள் முத்துக்குமார், வேலுச்சாமி, மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை வடகோவை மாவட்டக் கழக அலுவலக சாலையில் சிவானந்தா பகுதி கழக பொறுப்பாளர் டெம்போ சிவா, காந்திபுரம் பகுதி கழக பொறுப்பாளர் ஆர்.எம்.சேதுராமன் தலைமையில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். இதில் 68வது வார்டு செயலாளர் போஸ், கலாமணி, காந்திபுரம் மணி, இரா.நாகராஜ், அலுவலகப் பொறுப்பாளர் ஆர்.எஸ்.புரம் பூபாலன், பிரின்ஸ், இரா.பாலு, கண்ணம்மாள், சின்ராஜ், வெங்கடராமமூர்த்தி, அப்பு மோகன், குமார ராயப்பன், காட்டூர் வேலு, திவ்யராஜ், விஜயகுமார் அர்ஜுனன், முரளி, மணியன், ஆறுமுகம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆலந்தூர் ம. ஆபிரகாம்

### டிசம்பர் 2 (1987)



ஆலந்தூர் நகரக் கழகச் செயலாளராகவும் – சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

இந்தித் திணிப்பை எதிர்த்து கழகம் நடத்திய சட்டப்பிரிவு நகல் எரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக, 1986ஆம் ஆண்டு ஆளுங்கட்சியால் சட்டமன்றத்தில் பதவிப் பறிப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, பதவி பறிக்கப்பட்ட பேராசிரியர் உள்ளிட்ட பதின்மருள் ஆபிரகாமும் ஒருவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

நெருக்கடி நிலை காலத்தில் 'மிசா' கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.

"கழகத்தின் இரும்புத் தூண், எதிர்ப்புக்கும், இன்னலுக்கும், அடக்குமுறைக்கும் என்றுமே வளைந்து கொடுக்காத உறுதி படைத்த கொள்கைக் குன்றம்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.



## 25-ஆம் ஆண்டு

# நினைவு அஞ்சலி

## வறுமையில் நேர்மை!
## வளமையில் எளிமை!!

டிசம்பர் 02 2025



# N.V.வீரய்யன் INA

அவர்கள்

நகர தி.மு.க மு.அவைத் தலைவர்
நகரமன்ற மு.உறுப்பினர்
வர்த்தகர் சங்க மு.தலைவர்

...நீங்கா நினைவுகளுடன்...

**வீரா.கணேசன்** B.Com.,
நகர கழகச் செயலாளர்,
மன்னார்குடி.

**வீரா.கதிரவன்** M.A., M.L.,
மூத்த வழக்குரைஞர்,
அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர்
உயர்நீதிமன்றம் - மதுரை.